*13*

# கண்களை திறந்த மற்றும் கண்களை மூடிய ஒரு மனிதன்

## (2 இராஜாக்கள் 6:8-17)

*எலிசாவின் வெளிப்படையான ஊழியத்தை நாம் வந்தடைந்துவிட்டோம். நமது பாடங்களின் ஆரம்பத்தில், எலிசா மூன்று இராணுவங்களைக் காப்பாற்றிய சம்பவம் நீங்கலாக, மற்ற பெரும்பாலான சம்பவங்கள் தனிப்பட்ட தன்மையுள்ளவைகளாக இருந்தன. நாகமானை சுகமாக்கியதில் துவங்கி, பெரும்பாலான எஞ்சிய கிளை கதைகள் எல்லாம் தீர்க்கதரிசி தேசிய தலைவர்களுடன் கொண்டிருந்த உறவைச் சுற்றி அமையப்பெற்றுள்ளது.*

*இந்த பாடத் தொடரின் முதல் பாடத்தில், எலியா "அமைப்பு முறைகளுக்கு" (அதாவது, அவருடைய நாளின் அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு வெளியே) வெளியே செயலாற்றினார் என கூறியிருந்தோம். ஆனால் எலிசா "அமைப்பு முறைகளுக்கு உள்ளே" செயலாற்றினார். எது சிறந்தது? அதற்கான பதில்: "சூழ்நிலைகளை பொறுத்தது" என்பதாகும். எலியாவின் நாட்களில் அமைவுபெற்ற அதிகாரிகளோடு வேலை செய்வதற்கான நம்பிக்கை இல்லாத நிலையில், "அமைப்பு முறைகளுக்கு" வெளியே செயலாற்றுகிற ஒரு மனிதனுடைய தேவை தேவனுக்கு இருந்தது. எலிசா தன் ஊழியத்தை துவங்கின போது, சூழ்நிலை ஓரளவு மேம்பட்டிருந்தது மற்றும் "அமைப்பு முறைகளுக்கு உள்ளே" செயலாற்றக்கூடிய ஒரு மனிதனின் தேவை தேவனுக்கு இருந்தது. நமது எஞ்சிய தொடர்பாடங்களில் எலிசா இவ்விதம் செயலாற்றினார் என்பதை நாம் பார்ப்போம்.*

*நாம் இந்த பாடம் மற்றும் அடுத்துவரும் பாடம் ஆகியவற்றில் எலிசாவின் வாழ்க்கையில் நன்கு அறியப்பட்ட ஒரு கிளை கதையைப் படிப்போம். இந்த சம்பவங்களில் தீர்க்கதரிசி, கண்களை திறந்தார் மற்றும் கண்களை மூடினார். நம் எல்லாருக்கும் தேவைப்படும் பாடங்கள் இந்த கதையில் நிறைந்துள்ளன.*

### *ஒரு ஏமாற்றமடைந்த ராஜா (6:8-14)*

*"அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி" (வசனம் 8அ) என இந்த கதை துவங்குகிறது. இந்த ராஜா அநேகமாக பெனாதாத்தாக இருந்தார் (காண்க வசனம் 24). சீரியா மற்றும் இஸ்ரவேலுக்கிடையில் ஒரு பகைச் சூழல் நிலவிவந்தது. கதையின் இந்த காலகட்டத்தில், இஸ்ரவேலோடு பெனாதாத் செய்த "யுத்தம்" பெரும்பாலும் தனது சேனைகளை இஸ்ரவேலின் எல்லையெங்கும் அனுப்பி, திடீர் தாக்குதல் நடத்தி, கொள்ளையடிப்பதாக இருந்தது (காண்க 5:2; 6:23ஆ).*

***தவறிப்போன திட்டங்கள்***

*பெனாதாத், "இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளையமிறங்குவேன்" (6:8ஆ) என தனது இராணுவ தலைவர்களை அழைத்து திட்டமிடுவான். "பாளைய மிறங்குதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் நிச்சயமானதாக இல்லை. ஆனால் அது ஒரு இடத்தை கண்டுபிடித்து அங்கே கூடாரங்களை அமைப்பதைவிட அதி கமானதாக இருக்கிறது.* REB *மொழிபெயர்ப்பில், "இந்த இந்த திசையில் நான் தாக்குதல் நடத்துவேன்" என்றுள்ளது.* CJB *மொழிபெயர்ப்பில், "இன்ன இன்ன இடத்தில் நான் எனது பதுங்கியிருந்து தாக்கும் பாளையங்களை அமைப்பேன்" என்றுள்ளது. ராஜாவின் நோக்கம், இஸ்ரவேல் படைவீரர்களை மறைந்திருந்து தாக்குவதாக இருந்தது, அல்லது இஸ்ரவேல் ராஜாவுக்கு ஒரு அதிர்ச்சியை கொடுத்து, அவரை சிறைப்பிடிப்பதாகவும் இருந்திருக்கலாம் (வசனம் 9இல் உள்ள "எச்சரிக்கையாயிரும்" என்ற வார்த்தையை கவனியுங்கள்). ஆனால் அவன் திட்டமிட்டபடி ஒவ்வொரு முறையும் தன் படைவீரர்களை அனுப்பியபோது, அந்த இடங்கள் பலமாய் பாதுகாக்கப்பட்டிருந்தது (காண்க வசனம் 10அ). ஆகவே அவர்கள் பின்வாங்க வேண்டியதாயிருந்தது.*

*ராஜாவின் ஏமாற்றத்திற்கு காரணம், கர்த்தர் அவனுடைய திட்டங்களை பற்றி எலிசாவுக்கு அறிவித்து வந்ததாகும். தீர்க்கதரிசி கேயாசியின் செயல்பாடுகளை அறிந்திருந்ததுபோல (5:26அ), அவர் பெனாதாத்தின் திட்டங்களையும் அறிந்திருந்தார். எலிசா இந்த தகவல்களை இஸ்ரவேலின் ராஜாவுக்கு (அநேகமாக யோராம்) தெரிவித்து வந்தான். எலிசா யோராமை விரும்பவில்லை (காண்க 3:13, 14), ஆனால் தேவனுடைய தேசத்தைப் பாதுகாப்பவர் என்ற தம் பணியை நிறைவேற்றுவதில், தனிப்பட்ட விரோதம் தலையிடுவதை அவன் அனுமதிக்கவில்லை.*

*எலிசா "இன்ன இடத்திற்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள்" என்று ராஜாவுக்கு செய்தி அனுப்பினான் (6:9ஆ). "எச்சரிக்கையாயிரும்" என்ற வார்த்தை ராஜாவின் இராணுவத்தை அல்லது ராஜாவையே குறிக்கிறதாக இருக்கக்கூடும். இந்த காலகட்டத்தில், தீர்க்கதரிசி எதுவும் பேசினால் அதை கவனித்து நடக்க வேண்டும் என்பதை உணரும் அளவுக்கு யோராம் எலிசாவை பற்றி அறிந்திருந்தார் (காண்க 3:18, 24; 5:8) இப்படியாக அவன் தனக்கு சொல்லப்பட்ட தகவலின்படி செயல்பட்டான்: "... இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து; ... மனுஷரை அனுப்பி எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான்" (6:10).*

*சீரியாவின் ராஜா, இது ஒரு இணை நிகழ்ச்சி என்று சொல்லப்படுவதற்கு ஏதுவில்லாதபடி, மறுபடியும் மறுபடியும், அடிக்கடி தன் திட்டங்களில் தோல்வி யடைந்தான். வசனம் 11இன்படி, "இந்த காரியத்தினிமித்தம் சீரியா ராஜாவின் இருதயம் குழம்பியது" (வசனம் 11அ). "இருதயம் குழம்பியது" என்ற எபிரேய வார்த்தை "புயல் அடித்தது" என பொருள்படும்.*[1] CEV *மொழிபெயர்ப்பில் ராஜா "மூர்க்கமடைந்தான்" என்றுள்ளது.*

*சீரியாவின் ராஜா, தன் படைவீரர்களில் யாரோ ஒரு உளவாளி இருந்து கொண்டு, எதிரிக்கு தன் திட்டங்களை அறிவித்துவருகிறான் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். அவன் தன் இராணுவ ஆலோசகர்களை அழைத்து, "நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார்*

என்று நீங்கள் எனக்கு அறிவிக்கமாட்டீர்களா?" என்று கேட்டான் (வசனம் 11ஆ) செப்துவஜிந்து மொழிபெயர்ப்பில், "இஸ்ரவேலின் ராஜாவிடம் என்னை காட்டிக்கொடுத்தவன் யார்?" என்றுள்ளது.[2]

இது ஒரு நெருக்கடியான சமயமாக இருந்திருக்க வேண்டும். ராஜாக்கள் சந்தேகப்பட்டதால், தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்; "அப்படியில்லை என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான்" என்றான் (வசனம் 12). "நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகள்" என்பது மிகவும் தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் வார்த்தைகளை குறிக்கிற ஒரு உருவக மொழிநடையாக உள்ளது (ஒப்பிடுக பிரசங்கி 10:20).

நாம் எவைகளை செய்கிறோமோ, எவைகளை பேசுகிறோமோ மற்றும் எவைகளை சிந்திக்கிறோமோ அவைகள் யாவும் கர்த்தருக்கு மறைவாயிருப்பதில்லை என்பதை நீங்களும் நானும் நினைவில் வைக்க வேண்டிய அவசியமிருக்கிறது. "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபிரேயர் 4:13). ஹென்றி பிளன்ட் என்பவர் கூறிய பின்வரும் கருத்து எப்போதும் சரியாயிருக்கிறது: "நாம் தேவன் எல்லாவற்றையும் காண்கிறார், எல்லாவற்றையும் கேட்கிறார் மற்றும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என கூறுகிறோம் ஆனால் அவர் முழுக்க முழுக்க குருடராக, செவிடராக மற்றும் ஒன்றும் அறியாதவராக இருப்பதுபோல் நினைத்து வாழ்கிறோம்."[3]

எலிசாதான் தகவல் கொடுப்பவராக இருந்தார் என்பது பேசின அந்த மனிதனுக்கு எப்படி தெரிந்தது? வசனம் 12இல் குறிப்பிடப்பட்ட ஊழியக்காரன் நாகமானாக இருந்தார் என்ற ஒரு ஆலோசனை கூறப்பட்டதுண்டு. குணமாக்க முடியாத ஒரு வியாதியை குணமாக்கக் கூடிய ஒருவருக்கு, மறைவானவைகளை அறிந்து கொள்வதில் சிரமம் எதுவும் இருப்பதில்லை என நாகமான் யூகித்தான். எப்படியிருப்பினும், இதற்கு ஒரு எளிமையான பதிலுண்டு, சீரியர்கள் உளவாளிகளை வைத்திருந்தார்கள். அவர்களில் ஒருவன், இஸ்ரவேல் படைவீரர்கள் எலிசா தங்களுக்கு எவ்வாறு வெற்றியை தேடித்தந்தார் என பேசிக்கொண்டதை ஒட்டுக்கேட்டிருக்க வேண்டும்.

**நிச்சயமாக தோற்கப்போகும் ஒரு திட்டம்**

ராஜா அந்த மனிதன் எலிசாவை பற்றி கூறிய வார்த்தைகளை நம்பினான் என்பதிலிருந்து, நாகமானும் தீர்க்கதரிசியின் அற்புத வல்லமை குறித்து பெனாதாத்திடம் சொல்லியிருந்தார் என்பது விளங்குகிறது. ராஜாவுடைய மிகவும் அவசரமான இராணுவ இலக்கு இஸ்ரவேல் படையை தோற்கடிப்பதாகவோ அல்லது யோராமை சிறைப்பிடிப்பதாகவோ இருக்கவில்லை. மாறாக, அடுத்த இராணுவ தாக்குதல்களை தொடுப்பதற்கு முன்பாக, தீர்க்கதரிசியை செயலிழக்கச் செய்வதாக இருந்தது. அவன் இந்த அறிவுரைகளோடு உளவாளிகளை அனுப்பினான்: "நான் மனுஷரை அனுப்பி அவனை பிடிக்கும்படி, நீங்கள் போய் அவன் எங்கே இருக்கிறான் என்று

பாருங்கள்" என்றான் (2 இராஜாக்கள் 6:13அ).

"அவன் தோத்தானில் இருக்கிறான்" என்ற அறிக்கையோடு விரைவில் திரும்பினார்கள் (வசனம் 13ஆ). தோத்தான், சமாரியாவின் வடக்கில் பதினொன்று அல்லது பன்னிரெண்டு மைல்கள் தொலைவில் ஒரு மலையின் மேல் அமைந்திருந்த கிராமமாக இருந்தது. இந்த தோத்தானில்தான் ஆண்டுகளுக்கு முன்பாக, யோசேப்பின் சகோதரர் அவனை சிறைபிடித்து படுகுழியில் போட்டார்கள் (காண்க ஆதியாகமம் 37:17-24). ஒரு எழுத்தாளர் இது ஒரு "ஆபத்தான மற்றும் முடிவை தீர்மானிக்கும் இடமாக" இருந்தது என அழைக்கிறார்.[4] எலிசாவின் குடியிருப்பு சமாரியாவிலிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 5:3, 9; 6:24, 32அ). ஆனால் அவர் தன் ஊழியத்தினிமித்தம் பரவலாக எல்லா இடங்களுக்கும் பயணம் செய்தார். சில காலம் தங்கியிருக்கத் தக்கதாக அவர் தோத்தானில் அல்லது அதன் அருகாமையில் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தார்.

எலிசா எங்கே இருந்தான் என்பதை பெனாதாத் அறிந்தபோது, "அவனைப் பிடிக்கும்படிக்கு" (வசனம் 13) "அவன் அங்கே குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்" (6:14அ). அவன் போர்வீரர்கள் அவனை உயிரோடா அல்லது பிரேதமாகவா, எப்படி கொண்டு வரவேண்டும் என்பதை பற்றி அவன் கவலைப்படவில்லை. ராஜா தன் முழு படையையும் அனுப்பவில்லை (ஒப்பிடுக வசனம் 24), வழக்கமாக அனுப்புவதைவிட கூடுதல் படைகளை அனுப்பினான். இந்த படை பிரிவில் காலாட் படையினர், குதிரை படையினர் மற்றும் இரதங்களின் படைபிரிவும் இருந்தது. தோத்தான் போன்ற ஒரு சிறிய பட்டணத்தை முற்றுகையிடுவதற்கு கூட கணிசமான எண்ணிக்கையில் படைவீரர்கள் தேவைப்பட்டிருப்பார்கள்.

ராஜாவின் பகுப்பறிவை குறித்து ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. எலிசா அவனுடைய எல்லா இராணுவத் திட்டங்களையும் அறிந்திருந்தாரானால், அவர் இந்த திட்டத்தைக்குறித்து அறியாதிருப்பாரா? எலிசா அவர் படுக்கை அறையில் பேசின வார்த்தைகளை கூட அறிந்திருப்பாரானால் (வசனம் 12), ராஜா அவனை சிறைப்பிடிக்க முடியும் என எப்படி நம்பலாம்? அது துவக்கத்திலிருந்தே தோற்றுப்போவதற்கான ஒரு திட்டமாக இருந்தது. இருப்பினும், ஒரு மனித கண்ணோக்கில் அவன் திட்டம் நல்லதாகவே தெரிந்தது.

எலிசா இராணுவ வீரர்கள் வருவதை பார்க்க முடியாதபடியும் மற்றும் அவன் பட்டணத்திலிருந்து தப்பிவிடாதிருக்கவும், இராணுவம் நள்ளிரவில் தோத்தானுக்குள் பிரவேசிக்கும்படி நேரத்தை திட்டமிட்டார்கள் (வசனம் 14ஆ). அவர்கள் உடனே, "பட்டணத்தை வளைந்துகொண்டார்கள்" (வசனம் 14இ). தீர்க்கதரிசி தப்புவதற்கு வழியே இல்லாதது போலிருந்தது.

## ஒரு பயமடைந்த வேலைக்காரன் (6:15)

எலிசா என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அநேகமாக அறிந்திருந்தார், ஆனால் அது அவர் தூக்கத்தை கெடுக்கவில்லை. அவர் "உறங்காதவரும் மற்றும் தூங்காதவருமாகிய" தேவன் பேரில் தன் நம்பிக்கையை வைத்திருந்தார் (காண்க சங்கீதம் 121:4).

### ஒரு வெற்றிகொள்ளும் படைபிரிவு?

தேவனுடைய மனுஷனின் "வேலைக்காரன்" அதிகாலமே எழுந்து வெளியே

*புறப்பட்டான் (2 இராஜாக்கள் 6:15அ). நாகமான் சுகமாவதற்கு முன்பு இந்த சம்பவம் நடந்திருந்தால், கேயாசி தான் அந்த வேலைக்காரனாக இருந்தான். கேயாசி எலிசாவை விட்டுப் போன பிறகு, அவர் வேறு ஒரு வேலைக்காரனை - ஒரு தீர்க்கதரிசி பயிற்சியாளரை பெற்றிருக்க அதிக வாய்ப்பு இருந்தது (5:27). அப்படியானால், அவன் 9:1ல் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனாக இல்லாத பட்சத்தில், இந்த இடத்தில் மாத்திரமே நாம் இந்தப்புதிய உதவியாளைப்பற்றி வாசிக்கிறோம்.*

*ஒருவேளை அந்த வேலைக்காரன் தண்ணீர் இறைப்பதற்காக மற்றும் அந்த நாளில் பிற பணிகளை ஆயத்தப்படுத்துவதற்காக அதிகாலையில் எழுந்திருக்கலாம். எலிசா சமாரியாவுக்கு திரும்புவதற்கான பணிகளை அவர் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்திருக்கலாம். அவன் இரவில் இராணுவ நடமாட்டத்தின் சத்தத்தை கேட்டு, அது என்ன என்பதை ஆய்ந்தறிவதற்கு அதி காலையில் எழுந்திருக்கவும் வாய்ப்பு இருந்திருக்கலாம்.*[5]

*அவர் வெளியே சென்ற நோக்கம் எதுவாக இருப்பினும், அவர் எதை பார்த்தாரோ அது அவரைஅதிர்ச்சியில் ஆழ்த்தியது. "இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தை சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான்" (6:15ஆ).*

> *அவன் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் மற்றும் மேற்கிலும் எவ்வளவு தொலைவு பார்க்க முடிந்ததோ அவ்வளவு தொலைவும் சீரியா இராணுவம் என்ற பெயரில் இருப்பு ஆயுதங்களால் சூழப்பட்டிருந்தது. ... கிழக்கில் மலைகளினூடே அப்போதுதான் சூரியன் உதிக்க துவங்கியது ... அது இராணுவ வீரர்களின் தலைச்சீரா மற்றும் கேடங்களில் பட்டு பிரதிபலித்தது. வேலைக்காரனால் இரதங்களின் இரைச்சல், குதிரைகளின் கணைத்தல் மற்றும் படையை வழிநடத்திய அதிகாரிகளின் உரையாடல் மற்றும் போர் ஒலிகளை கேட்க முடிந்தது.*[6]

*எலிசா இஸ்ரவேல் ராஜாவோடு கொண்டிருந்த தகவல் தொடர்புகளை நன்கு அறிந்திருந்த வேலைக்காரன், அந்த இராணுவம் தங்களைத்தான் பிடிக்க வந்திருக்கிறது என சரியாக முடிவு செய்தான். அவன் வீட்டிற்கு ஓடி எலிசாவை நோக்கி, "ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்" என்றான் (வசனம் 15இ). அவனுடைய ஆச்சரியக்குரல், "எல்லாம் முடிந்து விட்டது! நாம் சிறை பிடிக்கப்பட்டு, அநேகமாக கொல்லப்படுவோம்!" என்று பொருள்பட்டது. "என்ன செய்வோம்" என்ற அவனுடைய கேள்வி, "நாம் ஒன்றும் செய்ய இயலாது! நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை!" என்பதை உணர்த்துகிறது. இவன் ஒரு புதிய வேலைக்காரனாக இருந்திருந்தால், அவன் எலிசாவுடன் இருக்கிறவரையிலும் - அங்கே எப்போதும் நம்பிக்கை இருந்தது - என்பதை உணராமல் இருந்ததற்காக மன்னிக்கப்படக்கூடும்.*

### ஒரு வெற்றிகொள்ளும் உலகம்?

*நீங்கள் எலிசாவின் சூழ்நிலையில் இருக்கிறீர்களா? சில சமயங்களில் உலகம் உங்களை மேற்கொண்டு விட்டதாக உணர்ந்திருக்கிறீர்களா? பாவம் மற்றும் பாவசோதனைகள் நம்மை சூழ்ந்திருப்பதை நீங்கள் பார்க்கும் போது,*

*சூழ்நிலை சில சமயங்களில் நம்பிக்கையற்றதாக தோன்றுகிறதா? நீங்கள் எப்போதாவது, "ஐயோ! நான் என்ன செய்வேன்?" என கதறவேண்டும் போல் உணர்ந்திருக்கிறீர்களா? அப்படியானால், வேலைக்காரனுக்கு என்ன செய்தி தேவைப்பட்டதோ அதே செய்தி உங்களுக்கும் தேவைப்படுகிறது.*

## *பயப்படாத தீர்க்கதரிசி (6:16, 17)*

**பயப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அப்போது**

எலிசா, "பயப்படாதே" என்று கூறி, பயந்து நடுங்கின தம் உதவியாளரை அமைதிப்படுத்த முயற்சித்தார் (வசனம் 16அ). இந்த வார்த்தைகள் தேவனுடைய வசனங்களில் அடிக்கடி காணப்படுகின்றன; அவைகள் எல்லா காலத்திலும் வாழும் எல்லா தேவனுடைய மக்களுக்கான செய்தியாயிருக்கிறது (காண்க மத்தேயு 10:28, 31; 1 பேதுரு 3:14; வெளிப்படுத்தின விசேஷம் 2:10). "எனக்கு விரோதமாக ஒரு பாளையமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது" என சங்கீதக்காரன் எழுதினார் (சங்கீதம் 27:3அ).

நாம் ஏன் பயப்படக்கூடாது? வேலைக்காரன் ஏன் பயப்படாமல் இருந்திருக்க வேண்டும்? எலிசா தொடர்ந்து பேசுகையில், "அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்றான் (2 இராஜாக்கள் 6:16ஆ; காண்க 2 நாளாகமம் 32:7). அந்த உதவியாளர் வெளியே ஓடி பட்டணத்தைச் சூழ்ந்துள்ள போர் வீரர்களை, "ஒன்று ... இரண்டு ... மூன்று ... (பின்பு முணுமுணுத்து) ... தொண்ணூற்று ஐந்து ..." (முணுமுணுத்து) என்று எண்ணுவதை நான் காண்கிறேன் ... அங்கே *நூற்றுக் கணக்கானவர்கள்* இருந்தார்கள்!" பின்பு அவன் உள்ளே ஓடி, "எலிசா ஒருவர்; நான் ஒருவன் ஆக இங்கே நாம் இருவர்தான். *நூற்றுக்கணக்கானவர்கள்* வெளியில் இருக்கிறார்கள் மற்றும் நாம் *இருவர்* மட்டும் இங்கே இருக்கிறோம்! என எண்ணுவதை நான் பார்க்கிறேன். '*அவர்களோடிருக்கிறவர்களைப்* பார்க்கிலும் *நம்மோடிருக்கிறவர்கள்*' அதிகம் என்று சொன்னாரே, அதை எந்த அர்த்தத்தில் அவர் சொன்னார்?"

பின்பு எலிசா ஜெபித்தார். அவர் தனக்காக ஜெபிக்கவில்லை. அவன், எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது வந்த, "அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளையும்" பார்த்திருக்கிறார் (2 இராஜாக்கள் 2:11). ஆவிக்குரியவைகளின் நிஜத்தன்மையை அவர் நன்கு அறிந்திருந்தார். தேவன் தன்னை பாதுகாப்பார் என்பதை அறிந்திருந்தார். மாறாக, அவர் அஞ்சி நடுங்கிய தன் உதவியாளருக்காக ஜெபித்தார். "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என்றான் (வசனம் 17அ). அவனுடைய வேலைக்காரன் மாம்சக் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தான்; அவன் விசுவாச "கண்களால்" "பார்க்க" வேண்டியவனாக இருந்தான். பார்ட்டன் காப்மென் என்பவர் வசனம் 17ஐ "பழைய ஏற்பாட்டில் மிகவும் கட்டியெழுப்பக்கூடிய வசனங்களில் ஒன்று" என அழைத்தார்.[7]

"உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்" (வசனம் 17ஆ). தோத்தானின் கிழக்கில், ஒரு மலைத்தொடர் சமவெளிக்குள்ளாக சென்றிருந்தது.[8] சற்று முன்னர் அந்த மலைத்தொடரின் கீழிறங்கு பகுதி அமைதியாயிருந்தது, பசுமையான

மரங்களும் புதர்களும் அங்கும் இங்கும் என பரந்திருந்தன. இப்போது திடீரென அந்த மலைத்தொடர் “அக்கினி இரதங்கள் மற்றும் அக்கினி குதிரைகளால்” சூழப்பட்டிருந்தன. “அவைகள் ஒரு விநோதமான, பூமியில் காணப்படாத பேரொளியோடு ஜொலித்தன.”[9]

வசனம் 17இல் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகம் வேதாகமம் “ஒலிமற்றும் ஒளி எல்லைக்கப்பால் சூழ்ந்துள்ள மகா பெரிய தேவதூதரின் சேனையை” குறிப்பிடும் ஒரு வழியாக உள்ளது.[10] இந்த “தூதரின் சேனை” எலிசாவை சுற்றிலுமிருந்ததாக பேசப்பட்டது (வசனம் 17இ). முன்னதாக, இந்த தூதரின் சேனை தேவனுடைய ஊழியக்காரராகிய எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருடன் சென்றது; இப்போது தேவனுடைய ஊழியக்காரராகிய எலிசாவை பாதுகாத்துக்கொண்டிருந்தது.

**பயப்படுகிறவர்களுக்கு ஆறுதல் இப்போது**

எலிசாவின் செய்தி இன்றும் நமக்கு பேசக்கூடியதாயிருக்கிறது: “பயப்படாதே: அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்” (வசனம் 16). நமது கண்கள் ஆவிக்குரிய நிஜங்களை காணும்படி திறக்கப்படவேண்டியது, நமது தேவைகளில் மிகப்பெரிய ஒரு தேவையாயிருக்கிறது. நாம் மாம்ச கண்களோடு மாத்திரம் பார்ப்போமானால், நாம் தொடர்ந்து ஏமாற்றத்திலும் தோல்வியிலும் இருப்பதை கண்டுபிடிப்போம். நாம் விசுவாச கண்களால் பார்க்க கற்றுக்கொள்வோமானால் (காண்க எபிரெயர் 11:27) நாம் உற்சாகமடைவோம் மற்றும் பெலனடைவோம்.

பரலோக சேனை எலிசாவை சூழ்ந்திருந்தது போல, தேவனுடைய தூதர்கள் உதவி செய்யவும் மற்றும் பாதுகாக்கவும் அவருடைய பிள்ளைகளை சூழ்ந்திருக்கிறார்கள். தாவீது, “கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்” (சங்கீதம் 34:7) என எழுதினார். மறுபடியுமாக சங்கீதக்காரன், “பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்” என்றான் (சங்கீதம் 125:2). புதிய ஏற்பாட்டில் தூதர்கள், இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? (எபிரெயர் 1:14) என குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

பொல்லாத ஆவிகளுடைய சேனையின் வல்லமையை நான் குறைத்து மதிப்பிடமாட்டேன் (காண்க எபேசியர் 6:12), ஆனால், “அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்” என்பது நம் இருதயங்களில் எழுதப்பட வேண்டும் (2 இராஜாக்கள் 6:16ஆ). இயேசு கிறிஸ்துவானவர், “பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்கள்” அழைக்கப்படக்கூடும் என கூறினார் (மத்தேயு 26:53). அது 72,000க்கும் அதிகமான தூதர்களாக இருக்கும். வெளிப்படுத்தின விசேஷத்தின் உருவக நடையில், தேவனுடைய தண்டனையை நிறைவேற்றும் முகவர்கள் தொகை “இருபது கோடியாயிருந்தது” என கூறப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 9:16). இந்த எண்கள் சொல் அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. ஆனால் அவைகள் எண்ணிலடங்கா பரலோக சேனையை நமக்கு காண்பிக்கிறது.

*தேவ தூதர்களை குறித்து நாம் அதிகமாக அறியாதிருக்கிறோம். இன்று நாம் தேவதூதரைக்குறித்து கேள்விப்படும் பெரும்பாலான விஷயங்கள் கட்டுக்கதைகளாக மற்றும் கற்பனை கதைகளாக இருக்கின்றன. எப்படியிருப்பினும், அவர்கள் சர்வவல்லமையுள்ள தேவனுடைய முகவர்கள், அவர்கள் நமது நலனில் பிரத்தியேகமாக அக்கறையாயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடியும் (காண்க சங்கீதம் 91:11), மேலும் நமது வாழ்க்கையை ஆசீர்வதிக்க தேவன் அவர்களை பயன்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் அதை எலிசா இவ்விதமாக விளக்குகிறார்: "அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" (2 இராஜாக்கள் 6:16ஆ). புதிய ஏற்பாட்டில் யோவான் இதை இவ்விதமாக தெரிவித்துள்ளார்: "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (1 யோவான் 4:4).*

*அடுத்த முறை நீங்கள் ஒரு ஆவிக்குரிய போராட்டத்தில் இருப்பதை காண நேர்ந்தால், உங்களுக்காக யார் போராடுகிறார் என்பதை நினைவில் வையுங்கள். மோசே இஸ்ரவேலரை நோக்கி, "உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்றான் (உபாகமம் 20:4). எசேக்கியா தன் நாட்களில் இருந்த ஜனங்களை நோக்கி, "நமக்கு துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே" என்று கூறினான் (2 நாளாகமம் 32:8ஆ). அவர்களுடைய யுத்தங்கள் மாம்ச பிரகாரமானவைகளாக இருந்த நிலையில், நம்முடைய யுத்தங்கள் ஆவிக்குரியவைகளாக இருக்கின்றன, ஆனால் அதே தேவனானவர் "நமக்காக யுத்தங்களை பண்ணும்படி" நம்மோடிருக்கிறார். பவுல், "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதியாயிருப்பவன் யார்?" என எழுதினார் (ரோமர் 8:31ஆ). தேவன் நம்மை பாதுகாக்க "நம்மோடிருப்பாரானால்," நம்மை அழிக்க யார் "நமக்கு எதிராக" இருக்கக்கூடும்? அதற்கான பதில் "இல்லை, ஒருவரும் இல்லை!" என்பதாகவுள்ளது.*

*எலிசா, "கர்த்தாவே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என விண்ணப்பம் பண்ணினான் (2 இராஜாக்கள் 6:17அ). அடுத்த முறை நாம் பயம் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றால் நிரப்பப்படும் போது, "கர்த்தாவே, எங்கள் கண்களை திறந்து, நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதையும் மற்றும் எங்களுக்காக கரிசனைப்படுகிறீர் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்ள எங்களுக்கு உதவி செய்தருளும்!" என்று ஜெபிப்போமாக.*

## *முடிவுரை*

*"கண்களை திறந்த மற்றும் கண்களை மூடிய ஒரு மனிதன்" என்ற தலைப்பிலான படிப்பை நமது அடுத்த பாடத்திலும் தொடர்ந்து படிப்போம். எலிசா மற்றும் அவருடைய வேலைக்காரன் ஆகியோர் எப்படி காப்பாற்றப்பட்டார்கள் என்பதையும் மற்றும் எதிர்பாராத பலன்களைக் குறித்தும் நாம் பார்ப்போம். நாம் இந்த பாடத்தை முடிக்கையில், நாம் நமது கண்களை திறக்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.*

*பவுல், "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"*

*என எழுதினார் (2 கொரிந்தியர் 4:4). சாத்தான், ஒருவேளை இரட்சிப்பு மற்றும் பாதுகாப்பை பெற கர்த்தரிடம் விரைந்து செல்ல வேண்டிய அவசியத்தை நீங்கள் உணராதபடி உங்கள் மனக்கண்களை குருடாக்கியிருக்கிறான். ஏதோ ஒரு காரணத்திற்காக உங்கள் மனக்கண்களை நீங்கள் அடைத்திருக்கிறீர்கள் (காண்க மத்தேயு 13:15). ஜேம்ஸ் W. நிக்கல்ஸ் என்பவர் பின்வறுமாறு எழுதினார்.*

> *நான் ஒரு சிறுவனாயிருந்தபோது, கண்களை இறுக மூடிக்கொண்டு இருளில் நடக்கும் பழக்கத்தை உடையவனாக இருந்தேன். பல சந்தர்ப்பங்களில், தூரத்திலிருந்து பிரதிபலிக்கும் ஒளி நான் பார்ப்பதற்கு உதவியிருக்கக்கூடிய பகுதிகளுக்கு வருவேன், ஆனால் நான் எனது கண்களை இருக்க மூடிக்கொண்டு; வழியில் இடறுவேன், மீண்டும் இடறுவேன், கீழே விழுவேன். கண்களை திறந்து நான் செய்தது எவ்வளவு மதியீனமானதாயிருந்தது என வருத்தப்படுவேன், ஏனெனில் நான் எனது கண்களை திறந்திருந்தால், நான் எனது பாதையைப் பார்த்திருக்கக் கூடும்.*
>
> *நண்பர்களே, உங்களில் ஆயிரக்கணக்கானோர் உங்கள் வாழ்க்கைப் பாதையில் கண்களை மூடினவர்களாக விரைந்து போய் கொண்டிருக்கிறீர்கள் ... தேவன் மற்றும் அவருடைய ஆச்சரியமான அன்புக்கு உங்கள் கண்களை மூடினவர்களாக இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் மீட்பின் வழிக்கு உங்கள் கண்களை மூடினவர்களாக விரைந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்போது அன்றைய எலிசாவைப் போல "கர்த்தாவே, அவர்கள் பார்க்கும்படிக்கு அவர்கள் கண்களை திறந்தருளும்" என்பதே எனது ஜெபமாயிருக்கிறது.*[11]

*உங்கள் கண்கள் ''அடைக்கப்பட்டிருக்குமானால்/ மூடப்பட்டிருக்குமானால்" இன்றைக்கே அவைகளை திறவுங்கள் மற்றும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியுங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 339. [2]Ibid. [3]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 135. [4]J. Vernon McGee, *Danger and Destiny*: *Episodes in the Life of Elisha* (Pasadena, Calif.: Thru the Bible Radio Network, n.d.), 20. [5]*இதர சாத்தியக்கூறுகள் கவனிக்கப்படக் கூடும். "அவர் ஒருவேளை அதிகாலையில் துயில் எழக்கூடியவராக இருந்திருக்கலாம்." நீங்கள் வாழும் பகுதியின் பழக்கவழக்கங்களுக்கேற்ப பொருத்திப்பார்க்கக்கூடும்.* [6]Joe D. Schubert, "Open Our Eyes That We May See," *The Preacher's Periodical* (June 1982): 17. [7]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 81. [8]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 326. [9]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 121. [10]James E. Smith, *The Books of History,* Old Testament Survey Series

(Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 568.

[11]James W. Nichols, “Lord, Open Our Eyes,” *Churches of Christ Salute You: January and February Sermons* (Abilene, Tex.: Herald of Truth, 1955), 9.